# கம்பராமாயணம் சுட்டும் அரசுகள் – ஒரு விபரண ஆய்வு

**அ.அனுராதமேனன்**

**ஆய்வுச்சுருக்கம்:**

கம்பராமாயணமானது சோழர் காலத்து இலக்கியம் ஆகும். இந்நூல் இந்துசமய இதிகாசங்களில் ஒன்றான வடமொழி வால்மீகி இராமாயணத்தை மூலமாகக் கொண்டு அதனைத் தழுவி தமிழில் எழுதப்பட்ட வழிநூலாகும். கம்பராமாயணம் ஒரு வழிநூலாக இருந்தாலும் கம்பன் தனக்கே உரித்தான பாணியில் கருப்பொருள் சிதையாமல் இதனை இயற்றியுள்ளார். கம்பனின் இராமாயணத்தில் சமூகப் பிரதிபலிப்புகள், வாழ்வியல் சிந்தனைகள், அரசியல் சிந்தனைகள் என்பன கூறப்பட்ட நிலையிலும் அதனை அறச்சார்புள்ள இலக்கியம் என்றே ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். இருப்பினும் கம்பராமாயணத்தில் உள்ள அரசியல் சிந்தனைகளைத் தனிக்கூறுகளாகப் பார்ப்பது என்பது கடினமானதாகவே உள்ளது. இதுவே இந்த ஆய்வில் எழுகின்ற பிரச்சினையாகும். கம்பனின் இராம காதையில் ஐந்து நாடுகளின் அரசுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு பேரரசுகள், மூன்று சிற்றரசுகள். பேரரசுகளில் ஒன்று அயோத்தி. மற்றொன்று இலங்கை. சிற்றரசுகளில் மிதிலை அரசு ஒன்று, கங்கைக் கரை அரசு ஒன்று, கிக்ஷ்கிந்தை அரசு ஒன்று. இந்த ஐந்து அரசுகள் பற்றியும் ஆட்சி முறைகள் பற்றியும் ஆட்சியாளர்கள் பற்றியும் அரசியற் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்வதை நோக்கமாகவும் கம்பராமாயணத்தை ஆய்வுப்பரப்பாகவும் கொண்டு விபரணப்பகுப்பாய்வு முறையில் இவ்வாய்வு அமைகின்றது. கம்பராமாயணத்தில் கூறப்பட்ட அரசுகளின் ஊடாக மேல்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன. புராதன இந்து அரசியல் முறைப்படி கம்பர் சுட்டும் அரசுகளில் முடியாட்சியே இடம்பெற்றுள்ளது என்பதும் இலங்கைப் பேரரசு வன்மை சார்ந்த பேரரசு, வன்மையில் முடிந்த பேரரசு என்பதும் அப்பேரரசுக்கு சூர்ப்பனகை கூற்றாக அமைந்தாள் என்பதும் கிஷ்கிந்தை அரசு வானர அரசு என்பதும் வானர அரசாக இருந்தாலும் ஒரு அரசுக்குரிய அமைப்பு, மந்திரிசபை அமைந்திருந்தது என்பதும் மிதிலை அரசு செல்வச் செழிப்புள்ள அரசு என்பதும் கங்கைக்கரை அரசு அமைதியான அரசு என்பதும் அயோத்தி அரசு குறைகளும் நிறைகளும் உடைய பேரரசாக விளங்கி எந்தச் சூழ்நிலையிலும் அறம்சார்ந்த நெறிமுறையைப் பின்பற்றியதால் வெற்றிபெற்றது என்பதுமாகும். எனவே இவ்வகையில் நோக்குமிடத்து கம்பன் அந்த அரசுகளின் ஊடாக அறம் சார்ந்த அரசியலை வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

**திறவுச்சொற்கள்:** கம்பன், இராமாயணம், அரசு, அரசியல் சிந்தனைகள், ஆட்சிமுறை

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முல்லைத்தீவு
anurathamenan@gmail.com